# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 4703 of 2024

Deposition of witness for

PW1

| | |
|---|---|
| Name | : Thiru.Balaji |
| Father's Name | : Late V.A.Srinivasan |
| Age | : 60 Years |
| Address | : Flat 4A, CORAL SANDS, 54B/26, Beach Road, Kalakshetra Colony , Besant Nagar, Chennai 600 090. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day January of 2026 .

---

09.01.2026

PW1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

இந்து சமய அறநிலையத்துறையிடம் இருந்து என்னுடைய பொறுப்பு சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை சத் சங்கத்திடம் ஒப்படைக்க கூடாது என்றும் எனக்கு பின்னால் வருகின்ற உரிய நபரிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு ஏதாவது பிறப்பித்தார்களா என்றால் இல்லை. என்னை தக்கராக நியமித்த உத்தரவின் படியே நான் உரிய நபரிடம் என்னுடைய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன் என்று சொன்னால் சரிதான். 1 வது பிரதிவாதியை தன்னை தக்கராக நியமிக்க கோரி இந்து சமய அறநிலைத்துறையிடம் அணுகினார் என்றும் அவரைப் பற்றி என்னுடைய தாவா 16 பத்தியில் சொல்லி இருக்கின்ற விவரங்கள் அனைத்தும் தவறானது என்றும் அவர் அந்த பொறுப்பை தேடிச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் 1 வது பிரதிவாதியின் மீது வேண்டுமென்றே பழி சுமத்த வேண்டும் என்பதற்காக பொய்யான தகவல்களை சொல்லி இருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் கூட்டாக செயல்படுகின்றார்கள் என்பதை 1 வது பிரதிவாதி எனக்கு

எதிராக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளையே 2 வது பிரதிவாதியும் பொதுக்குழு நடந்த பொழுது சொன்னதால் இருவரும் கூட்டாக செயல்படுவதாக சொல்லிருப்பதாக சாட்சி சொல்லுகின்றார். அவ்வாறு சொன்னது என்னுடைய அனுமானம் என்றும் அது உண்மை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் எனக்கு எதிராக கூட்டாக செயல்படவில்லை என்றும் நடந்த விவரத்தையே பொதுக்குழுவில் தெரிவித்தார்கள் என்று சொன்னால் அது சரியில்ல. ஒன்னு ரெண்டு பிரதிவாதிகள் காரணமாக நான் மன உளைச்சலுக்கு உள்ளாக்க பட்டேன் என்பதும் அதன் காரணமாக எனக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது என்று சொல்லி இருப்பது பணத்தளவில் அல்ல என்றும் ஒரு நல்ல மதிப்புடன் இருந்த என்னைப்பற்றி தவறான அவதூறு கருத்துக்களை சொன்னதின் காரணமாக என்னுடைய மதிப்பு சமுதாயத்தில் தாழ்ந்து விட்டது என்றும் குடும்பத்தினுடைய மதிப்பும் தாழ்ந்து விட்டது என்றும் இதன் காரணமாக மனதளவிலும் நாங்கள் அதிகபட்சமான துயரத்தை சந்தித்திருப்பதாக சாட்சி சொல்லுகின்றார் அதே சேதம் என்றும் சொல்லுகின்றார். எனக்கு நல்ல மதிப்பு சமுதாயத்தில் உள்ளது என்று நானே சொல்லுகின்றேன் என்றும் பலர் என் மீது அதிருப்தியாகவே உள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த நேரத்தில் கோயில் அலுவலகத்தின் சாவி அனைத்தும் என்னிடம் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். கோயில் கணக்கு வழக்குகளுக்கும் வருமான வரி செலுத்துவதற்கும் எனக்கு சம்பந்தமில்லை என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதியை நான் வேண்டுமென்றே சேர்த்து இருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. பொதுவாக பொதுக்குழு கூட்டத்தில் அதன் உறுப்பினர்கள் எதைப் பற்றி பேசுவார்கள் என்றால் கோவில் சம்பந்தப்பட்ட விவரங்களை தான் பேசுவார்கள் என்று சாட்சி சொல்லுகின்றார்.
அதேபோல தான் ஒன்னு ரெண்டு பிரதிவாதிகள் கோவில் நகைகளை பற்றி பொதுக்குழுவில் கேட்டு இருக்கின்றார்கள் என்று சொன்னால் அது சரிதான். ஆனால் என் மீது நகையை இணைத்து பொய்யாக குற்றம் சாட்டி இருப்பது தான் தான் ஆட்சியபனை செய்வதாக சொல்லுகின்றார். தவறே செய்யாமல் தவறு செய்ததாக என்னை குற்றம் சாட்டியிருப்பதாகவும் சாட்சி சொல்லுகின்றார். எனக்கு குற்ற உணர்வு இருந்தது என்ற காரணத்திற்காக தான் நான் இந்த தாவாவையே தாக்கல் செய்திருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. சத்சங்கத்தின் தலைவர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்ற பட்சத்தில் சத்சங்கத்தையும் இந்த வழக்கின் ஒரு தரப்பினாக சேர்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் என்னை தரக்குறைவாக பேசி என் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சாட்டியவர்கள் மீது மட்டுமே இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் சத்சங்கம் உரிய நபர் இல்லை என்று சாட்சி

கூறுகின்றார். இந்து சமய அறநிலைத்துறை இந்த வழக்கின் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதற்கு காரணம் அவர்கள் எனக்கு எதிராக எந்த பொய்யான குற்றச்சாட்டையும் வைக்கவில்லை என்றும் பொய்யான குற்றச்சாட்டை வைத்தவர்கள் மீது மட்டுமே இந்த தாவாவை தாக்கல் செய்திருப்பதாகவும் சாட்சி சொல்லுகின்றார். இந்து சமய அறநிலைத்துறை பணிபுரியும் நபர்களின் பெயர்களை நான் பயன்படுத்தி இருப்பது அவர்களுக்கே தெரியாது என்று சொன்னால் அது சரியில்லை. நான் தனிப்பட்ட முறையில் இந்து சமய அறநிலைத்துறையில் பணிபுரியும் எந்த நபரின் பெயரையும் பயன்படுத்தவில்லை என்றும் அவர்களே என்னை பணி நியமனம் செய்ததால் மேற்படி துறையைப் பற்றி மட்டுமே சொல்லி இருப்பதாகவும் சாட்சி கூறுகின்றார். என்னால் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்று சொன்னால் அதுவும் சரி அல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

*Sd/-K.Geetharani, M.A., M.L.,*

Dt.09.01.2026

III Addl.District Judge.
II Additional District Court(FAC)
City Civil Court, Chennai.